# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை**

மற்றும்

**முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்**

இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**




பதிப்பாசிரியர்

**முனைவர் க. முருகேசன்**

157. ***Dr. T. Muraleeswari*** 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. ***கி. சுப்பிரமணியன்*** 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. ***அ. ராஜி*** 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. ***சு. மலர்விழி*** 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. ***முனைவர் வெ. சுகந்தா*** 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. ***முனைவர் பா.வேலம்மாள்*** 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. ***முனைவர் மொ. இரவிக்குமார்*** 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. ***முனைவர் இரா. மணிமேகலை*** 744
ஐவகை மன்றத்து அமைதி

165. ***முனைவர் க. முருகேசன்*** 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. ***ஆ. நித்யா*** 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. ***ம. விவேக் பிரபு*** 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. ***முனைவர் க. பழனிவேல்*** 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. ***இரா. அபிமன்யு*** 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. ***முனைவர் சு. சதீஷ்குமார்*** 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. ***ச. மல்லிகா*** 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. ***மு. ஜெயலட்சுமி*** 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. ***முனைவர் ந. இரஞ்சன்*** 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. ***முனைவர் கு. முத்துக்குமார்*** 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 167. வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

ம. விவேக் பிரபு
முனைவர் பட்ட ஆய்வாளர்
கணிதவியல் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோவை - 641 029.

## முன்னுரை

நவீன யுகம் நோக்கி மக்களை நகர்த்தும் இந்நூற்றாண்டில் மக்களின் அறிவு நிலை மேம்பட்டிருக்கிறது. அதே சமயம் அவர்தம் பண்பு நிலை பெருமளவில் திரியத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, பெண்கள் மீதான பார்வையில் இன்றைக்கும் இச்சமூகத்தில் ஒரு தெளிவு பிறக்கவில்லை. அதன் காரணமாகவே பெண்களுக்கான பல உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுகின்றன. அதன் விளைவாக, எண்ணற்ற ஆற்றல் வாய்க்கப்பட்டிருந்தாலும் பெண்கள் தங்களது அறிவை அஞ்சறைப் பெட்டிக்குள் புதைக்க நேருகிறது. உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமல்லாமல் பெண்கள் மீதிலான வன்கொடுமைகளும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்கள் எதிர் நோக்கும் சிக்கல்களையும், அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளையும், அதற்கான தீர்வுகளையும் ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நாம் தேர்வு செய்திருப்பது திரைக்களமாயினும் கவிஞர் வைரமுத்துவின் எதார்த்தமான வரிகளில் பெண்களின் வலிகளை நம்மால் உணர முடிகின்றது.

## பெண்களின் ஆற்றலும் அவலமும்

***"எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்."***

என்ற மகாகவி பாரதியாரின் குரலின் எதிரொலியாய் "சூலம்" திரைப்படத்தில் வைரமுத்துவின் வரிகள் அமைந்துள்ளன.

***"பெண்ணுக்கும் மாற்றமுண்டு
வாகைசூடும் ஆற்றலுண்டு.
சூலம் ஒன்று மூன்றல்லவா***